Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2022-2024 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month

## ஈரோட்டில் லெந்துகால கூட்டங்கள்

இடம் : C.S.I. ஆலய வளாகம்
பிரப் ரோடு, ஈரோடு

மார்ச் 5 சனிக்கிழமை பிரப் ஹாலில் குடும்ப ஆசீர்வாத ஜெபம் காலை 9 மணி முதல் 2 மணி வரை நடைபெறும்.

மார்ச் **4, 5, 6**
வெள்ளி, சனி, ஞாயிறு



தேவ செய்தியாளர்கள்
Dr. ஆனந்த ஸ்திரா
Mrs. மார்கிரேட் ஸ்திரா
Dr. ஜேன் ஜாஷ்வா

தினமும் மாலை 6.00 மணி

தொடர்புக்கு :
0431 – 2765386 &
94888 45627

## வேலூரில் லெந்துகால தியான ஜெபம்

ஏப்ரல் 2 சனிக்கிழமை C.S.I. மத்திய ஆலய வளாகத்தில் குடும்ப ஆசீர்வாத ஜெபம் காலை 9 மணி முதல் 2 மணி வரை நடைபெறும்.

ஏப்ரல் **1, 2, 3**
வெள்ளி, சனி, ஞாயிறு

இடம் : C.S.I. மத்திய ஆலயம், வேலூர்
தினமும் மாலை 6.00 மணி

தேவ செய்தியாளர்கள் : Dr. ஆனந்த ஸ்திரா & Dr. ஜேன் ஜாஷ்வா

தொடர்புக்கு : 0431 – 2765386, 94888 45627 & 94438 65161




## ஆறுதலின் நேரம்

*சிறப்பு நேரலை நிகழ்ச்சி*

(துதி ஆராதனை, தேவ செய்தி, வல்லமையான ஜெபம்)

நாள் : 18.03.22
மாலை 7:00 மணி

Live @
Dr. Jane Joshua | DrJaneJoshua | dr.janejosh

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,

# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர்:8 இதழ்:3 மார்ச் 2022 தனிபிரதி- ரூ.20/- ஆண்டு சந்தா- ரூ.200/-
VOL: 8 ISSUE NO : 3 March 2022 Single Copy - Rs 20/- ANNUAL SUBSCRIPTION: RS 200/-





**இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர்!**
**அவர் மிகுந்த மனதுருக்கமும், வல்லமையும் உடையவர்!**
**நொறுங்குண்ட தமது ஊழியக்காரரின் ஜெபத்தைக் கேட்டு**
**இன்றும் மகத்துவமாக செயலாற்றுகிறார்!**

## கொடிய கேன்ஸர் மற்றும் ஏவல் ஆவிகளை விரட்டி, புதுவாழ்வை தந்த அற்புதத்தின் தேவன்!

நான் சிறு வயதிலேயே கர்த்தருக்கு பயந்து நடக்கிறவள். என் பெற்றோரும் கர்த்தருக்கு மிகவும் பயந்தவர்கள். திடிரென்று எங்கள் வீட்டு அருகில் உள்ளவர்கள் எங்கள் மீது பொறாமை கொண்டு பயங்கரமான ஏவல் ஆவிகளை அனுப்பி எங்கள் குடும்பத்தை பலவிதங்களில் பாழாக்கிக் கொண்டிருந்தார்கள். அதற்காக பல லட்சங்களை செலவு செய்தும் பயன் ஒன்றும் இல்லை. ஆகவே Dr. **ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் தொடர்பு கொண்டு எங்களுக்காக ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டோம். சகோதரரும் எங்களுக்காக பாரத்தோடு ஜெபித்தார். கர்த்தர் தாமே எங்களை விட்டு போகாத ஏவல் ஆவிகளும், தற்கொலை ஆவிகளும், கொலைகார ஆவிகளும் எங்கள் குடும்பத்தை விட்டு நிரந்தரமாக போகும்படி உதவி செய்தார்.

அதுவுமல்லாமல் எனக்கு இரத்தப் புற்று நோய் (Acute myeloid Leukemia) என்னும் கொடிய வியாதியால் மிகவும் நொறுக்கப்பட்டேன். இரத்தம் ஏற்றி பலவிதமான பரிசோதனைகள் செய்து முடிவில் Bone Marrow Transplantation மற்றும் Stem cells Transplantation செய்ய வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள். என்னுடைய நிலைமை மிகவும் மோசமானது. இந்நிலையில் Dr. **ஆனந்த ஸ்திரா** அவர்கள் எனக்காக ஊக்கமாக ஜெபித்தார்கள். சர்வவல்ல தேவன் ஜெபத்தைக் கேட்டார். மருத்துவம் மூலமாக குணமடையாத வியாதி, மருத்துவர்கள் எத்தனை சிகிச்சை செய்தும் அவர்களால் குணப்படுத்த முடியாத கொடிய வியாதி எவ்வித மருந்தும் இன்றி, தேவன் என்னை தமது வல்லமையால் தொட்டு சுகமாக்கினார்.

அதுமாத்திரமல்ல, சோர்ந்து போன நிலையில் இருந்த என்னை பார்த்து, கர்த்தர் உனக்கு கொடுத்துள்ள தாலந்தான இந்த ஓவிய கலையை கொண்டு உன்னை ஆசீர்வதிப்பார் என்று சகோதரர் கூறினார். அவர்கள் கூறியது போலவே கர்த்தர் "ஓவியங்களை அழகாக நான் வரையவும், அது நல்ல விலைக்கு விற்பனையாகவும்" கிருபை செய்தார். அதில் கிடைத்த முதற்பலனை அன்பரின் ஊழியத்திற்கு தருகின்றேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

- Sis. **எஸ்தர்**

## இயற்கைக்கு அப்பாற்பட்ட மகத்துவ செயலை செய்யும் கர்த்தர்!

எனது வாலிப வயதில் திடீரென்று வந்த வலிப்பு நோயால் அவதிப்பட்டேன். எனினும் கர்த்தருடைய கிருபையால் நான் ஒரு முதுநிலை பட்டப்படிப்பு படித்து பட்டதாரியானேன். இந்நிலையில் Dr. **ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் வந்து என் எதிர்காலத்திற்காக ஜெபிக்கும்படி கேட்டு கொண்டேன். என்ன ஆச்சரியம்! தேவ கிருபையால் எனக்கு சௌதி அரேபியாவில் வேலை கிடைக்கும்படி கர்த்தர் அற்புதம் செய்தார். அந்த வேலையில் என்னுடைய பெலவீனத்திற்கு ஏற்றபடி சலுகை கிடைக்க அதிகாரிகள் மத்தியில் தேவன் பேசினார். எனக்கு அதற்கேற்ற வேலையை கொடுத்தனர். அந்நாட்டில் நான் வேலை செய்த நாட்கள் முழுமையும் தேவன் என்னை பத்திரமாய் பாதுகாத்துக்கொண்டார். இவ்வளவு பெரிய நன்மை செய்த தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். தேவன் செய்த எனக்கு செய்த நன்மையை மறவாமல் இரண்டு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தாங்குகின்றேன். கர்த்தர் நாமம் மகிமைப்படுவாக!

- Sis. **லாவண்யா**











# அன்பரின் ஊழியம்

மலர்: 8 ◆ மார்ச் 2022 ◆ இதழ் 3

## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் எனக்கு அன்பானவர்களே!

உங்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

ஒவ்வொரு மாதமும் இந்தப் பத்திரிக்கை உங்கள் இல்லங்களுக்கு வந்து ஆவிக்குரிய ஆசீர்வாதத்தை தருகிறது என்பதில் சந்தேகமே இல்லை. தொடர்ந்து இந்த பத்திரிக்கைக்கு ஆண்டு சந்தா செலுத்தி பத்திரிக்கை ஊழியப் பணியை தாங்குங்கள்.

தேவ ஜனமே! **சங்கீதம் 25:12,13-ல்** உள்ளபடியே தேவன் உங்களுக்கு தம்முடைய வழியை போதித்து, நன்மையான காரியங்களைத்தந்து, உங்கள் சந்ததிகளையும் ஆசீர்வதிப்பார்.

கடந்த மாதத்தில் ஊழியங்களுக்காகவும், SJ Saves Trust அறப்பணிகளுக்காகவும் ஜெபித்த, மனமுவந்து கொடுத்து தாங்கின அனைத்து தேவ பிள்ளைகளுக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியை தெரிவிக்கிறோம். பிப்ரவரி மாதத்தில் அநேக ஏழை பிள்ளைகளுக்கு உதவி செய்தோம். அதன் விபரங்கள் உள்ளே கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாதத்தில் பிறந்தநாள் காணும் என் தந்தைக்காகவும் என் மகனுக்காகவும் மறவாமல் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

எங்களது தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தினந்தோறும் தவறாமல் பாருங்கள். சமூக வலைதளங்களில் ஒளிபரப்பப்படும் அனைத்து நிகழ்ச்சிகளையும் பார்த்து, அநேக பிள்ளைகளுக்கு அவற்றை share செய்து, அவர்களும் ஆசீர்வதிக்கப்படும்படி

ஆசிரியர் / வெளியிடுபவர்: **Dr. ஜேன் ஜாஷ்வா**

| சந்தா விபரம் | | | |
|---|---|---|---|
| இந்தியா | : | ஆண்டு சந்தா ரூ.200/-. | ஆயுள் சந்தா ரூ.2,000/-. |
| வெளிநாடு | : | ஆண்டு சந்தா ரூ.1,500/-. | ஆயுள் சந்தா ரூ.15,000/-. |

அவசர ஜெப உதவிக்குத் தொலைபேசி எண்கள்: **(0431) 2765386, 2765952, 2760603, 2760604, 2760605** (24 மணி நேரமும்)

**Telugu & Hindi** : 99445 36343, **Malayalam** : 94889 32937, **Kannada** : 90031 17205

e-mail: **info@mojindia.org** website: **www.ministryofjesus.in**

முகவரி:- அன்பரின் ஊழியம், 40, S.P.K. தெரு, உறையூர், திருச்சி - 620 003. Address:- Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003.

உதவுங்கள். இது தேவனுடைய பார்வையில் மிகுந்த கனமான ஒரு காரியம்.

வரப்போகிற நாட்களில் Live Telecast நிகழ்ச்சிகளையும், **"அனுதின அற்புதம்"** நிகழ்ச்சியை பாருங்கள். பாடுபடுகின்ற கிறிஸ்தவர்களுக்காக ஒவ்வொரு ஜெப வேளையிலும் மறவாமல் ஜெபியுங்கள். நீங்கள் நமது ஜெப மையத்திற்கு வார நாட்களில் வந்து ஒரு மணி நேரம் ஊழியத் திற்காக, திருச்சபைக்காக ஜெபிக்கலாம். அவ்வாறு ஜெபிக்க விரும்புகிறவர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள். ஞாயிறுதோறும் டெலிவரன்ஸ் ஆலயத்தின் ஆன்லைன் ஆராதனையை மறவாமல் பார்த்து தேவ ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள்.

உங்களுடைய பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் மற்றும் தெரிந்தவர்கள் வேலைக்காக தேடி கொண்டிருந்தால் நமது பத்திரிக்கையில் வெளியாகியுள்ள Wanted பகுதியை பார்த்து விண்ணப்பிக்க சொல்லுங்கள். அவர்கள் தகுதிகேற்ற பணி வழங்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

தொடர்ந்து தேவனுடைய ஊழியங் களை உதாரத்துவமாய் தாங்குங்கள். உங்களுக்காக ஜெபிக்க நாங்கள் எப்பொழுதும் ஆயத்தமாய் இருக்கிறோம். கர்த்தர் பெரிய காரியங்களை செய்வார்.

## இம்மாத வாக்குத்தத்தம்

**பிலிப்பியர் 2:6-11**
**2கொரிந்தியர் 5:17**
**ஏசாயா 40:4**
**எபேசியர் 1:3**

## இதயம் தொட்ட எண்ணம்

**The Son became a slave**
**So slaves can become heirs.**

**தேவகுமாரன் அடிமையானார்!**
**அடிமைகள் சுதந்திரவாளிகளாக!**

கிறிஸ்துவின் பணியில்
Dr. **ஜேன் ஜாஷ்வா**

Tamil Whats App No: 95004 87059

## ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புகிறவர்கள் கீழ்க்காணும் மூன்று வங்கிக் கணக்குகளில் அனுப்பலாம்

| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| Account No. | Account No. | Account No. |
| 10848469699 | 10848559426 | 10848474869 |

State Bank of India, Cantonment, Trichy Main Branch
IFS Code : SBIN 0000930

மேற்கண்ட வங்கியின் மூலமாக நீங்கள் காணிக்கை அனுப்பிய உடன் எங்களது Cell No : 95004 87061 என்ற எண்ணிற்கு காணிக்கை அனுப்பிய விவரத்தை கூறலாம். அல்லது SMS மூலம் தெரிவிக்கலாம்.

**உங்கள் காணிக்கைகளை அனுப்ப மேலும் ஒரு எளிய வழி**

← இந்த QR Code – ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது Cell No : 95004 87061 என்ற எண் மூலமும் அனைத்து பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் (Google pay, Paytm, PhonePe etc.,) மூலமாகவும் எங்கள் மேற்கண்ட வங்கிக் கணக்குகளுக்கு காணிக்கை அனுப்பலாம்.




## கன்னியாகுமரி பகுதியிலுள்ள அன்பரின் ஊழியப் பங்காளர்கள் கவனத்திற்கு

நமது அன்பரின் ஊழியப் பிரதிநிதியாக கீழ்க்கண்டவர் நியமிக்கப்பட்டுள்ளார். எனவே உங்கள் ஜெப வேண்டுதல்களை அவரிடம் கூறி ஜெபித்துக் கொள்ளலாம். மேலும், நமது ஊழிய விபரங்களையும் அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

**கன்னியாகுமரி : 82203 17472**



# புதிய காரியத்தைச் செய்வார்

தேவ செய்தி : Dr. ஜேன் ஜாஷ்வா

**இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்; இப்பொழுதே அது தோன்றும்; நீங்கள் அதை அறியீர்களா? நான் வனாந்தரத்திலே வழியையும், அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன் - ஏசாயா 43:19**

அன்பரின் ஊழிய வாசகர்களே, பிரியமான பங்காளர்களே!

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.

கர்த்தர் நமக்குக் கொடுத்த இந்த புதிய மாதத்தில் இந்த செய்தியை உங்களோடு பகிர்ந்துக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். கர்த்தருக்கு பிரியமான உங்களைப் பார்த்து **"இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்"** என்று தேவன் சொல்கிறார். இதே வசனத்தை நாம் **வெளிப்படுத்தல் 21:5-ல்** பார்க்கிறோம். **"சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர்: இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார்".**

உலகத்தில் நாம் காணும் எதுவுமே புதியதல்ல. உதாரணத்திற்கு கொரோனா என்கின்ற வியாதியின் பெயர் பல வருடங்களுக்கு முன்பாகவே பழக்கத்தில் இருந்ததை நாம் அறிவோம். **முன் இருந்ததே இனிமேலும் இருக்கும். முன் செய்யப்பட்டதே பின்னும் செய்யப்படும். சூரியனுக்குக் கீழே நூதனமானது ஒன்றுமில்லை. இதைப்பார், இது நூதனம் என்று சொல்லப்படத்தக்க காரியம் ஒன்றுண்டோ? அது நமக்கு முன்னுள்ள பூர்வகாலங்களிலும் இருந்ததே.** என்று **பிரசங்கி 1:9,10-ல்** சாலொமோன் ஞானி கூறுகிறார். சாலொமோன் எவ்வளவு பெரிய ஞானியாக இருந்தாலும் அவனும் ஒரு மனிதனே. ஆகவே தான் எல்லாமே மாயையும், ஏற்கனவே காணப்பட்டதாயும் இருக்கிறது என்று சொல்கிறான். ஆனால் **தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்கோ தேவன் இன்றைக்கு புதிய காரியத்தை செய்வேன் என்று வாக்குத்தத்தம் பண்ணுகிறார்.**

புதிய காரியத்தை செய்கிறவர் நம்மைப் போல ஒரு மனிதன் அல்ல. அவர் சிருஷ்டி கர்த்தர். சிருஷ்டிகர் எப்பொழுதுமே புதியவைகளை, நம் அறிவுக்கு எட்டாதவைகளை செய்வார்.

**ஏசாயா 43 : 19** வசனத்தில் தேவனாகிய கர்த்தர் ஏசாயா தீர்க்கதரிசியின் மூலமாக தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலை, யாக்கோபின் சந்ததியை ஆறுதல் படுத்துகிறார். புதிய காரியத்தை செய்கிறேன் என்று அவர் சொல்லும்பொழுது இதற்கு முன்பு செய்யாத ஒன்றை, ஆச்சரியமான ஒன்றை செய்யப் போகிறார் என்று அர்த்தம். **எனவே முந்தினவைகளை நினைக்கவேண்டாம். பூர்வமானவைகளைச் சிந்திக்கவேண்டாம்** என்று **ஏசாயா 43:**

**18ல்** தேவன் கூறுகிறார். உங்கள் வாழ்க்கையில் காணப்படுகிற எல்லா தடைகள், தடுமாற்றங்கள், ஆசீர்வாத குறைவுகளை தேவன் தாமே முற்றிலும் மாற்றி, சகலத்தையும் புதியதாக்கு கிறார். தேவன் அவ்வாறு புதியதாக்கும் பொழுது, பழையவற்றிற்கான எந்த ஒரு அடையாளமும் காணப்படாது. தேவன் எவற்றையெல்லாம் புதியதாக்குகிறார் என்பதைக் குறித்து இந்த செய்தியிலே அறிந்துக் கொள்வோம்.

## 1. புதிய இருதயத்தைக் கொடுக்கிறார்

**நம்முடைய இருதயமானது நம்முடைய எல்லா உணர்வுகளுக்கும், ஆசைகளுக்கும் உறைவிடமாய் இருக்கிறது. இருதயமே கேடுள்ளதும் மகாதிருக்குள்ளதுமாயிருக்கிறது (எரேமியா 17:9)** என்று வேதம் சொல்கிறது. இயேசு கிறிஸ்து இதைக் குறித்து **"ஒரு மனிதனுடைய இருதயத்தில் இருந்து தோன்று கிறவைகளே அவனை தீட்டுப்படுத்தும்" என்று கூறுகிறார் (மத்தேயு 15:18,19).** நம் எல்லாருடைய இருதயமும் நிச்சயமாகவே மிக மிக கேடுள்ளதாயும், கெட்டவைகளை சிந்திக்கிற தாயும், தேவனை விட்டு தூரம் போகிறதாயும் இருக்கிறது. இந்த பொல்லாத இருதயத்தை தேவனாகிய கர்த்தர் இன்று உங்களிடத்திலிருந்து எடுத்துப் போட்டு புதிய இருதயத்தை கொடுப்பார். **எசேக்கியேல் 36: 26; 11:19ல்** நாம் பார்க்கிறபடி **"அவர் நமக்கு புதிய ஆவியை கட்டளையிட்டு கல்லான இருதயத்தை எடுத்துப் போட்டு சதையான இருதயத்தை கொடுப்பார்."** பரிசுத்த ஆவியானவர் நம்முடைய இருதயத்திற்குள் வரும்போது நம்முடைய இருதயம் தேவனை உண்மையும், உத்தமுமாக பின்பற்றும். தேவனை உத்தம இருதயத்தோடு பின்பற்றுவது மிக மிக அவசியமான ஒரு காரியம். ஆபிரகாம், யோசேப்பு, தாவீது இவர்கள் அனைவரும் தேவாதி தேவனை உத்தமமாய் பின்பற்றினார்கள். உலகத்தின் ஐசுவரியங்களோ, ஆசை இச்சைகளோ ஒரு நாளும் அவர்களை கவர்ந்திழுக்கவில்லை. **ஆபிரகாமின் இருதயம் கர்த்தருக்கு முன்பாக உண்மையுள்ளதாக காணப்பட்டது.** என்று **நெகேமியா 9:8-ல்** பார்க்கிறோம். தாவீதை குறித்து தேவனே **"அவன் உத்தம இருதயத்தோடு என்னை பின்பற்றினான்"** என்று சொல்கிறார். தாவீது ஒரு வேளை தேவனுக்கு விரோதமாக பாவம் செய்திருந்தாலும், அவன் திரும்பவும் தன்னை தாழ்த்தி உத்தம இருதயத்தோடு தேவனை பின்பற்றினான். ஆம், உலகில் நமக்கு பலவிதமான சிற்றின்பங்களும் ஆசைகளும் பாவத்திற்கு நேராய் இழுக்கிற கவர்ச்சியான காரியங்கள் காணப்பட்டாலும் அவற்றை எல்லாம் நாம் மறந்து தாவீதை போல தேவன் ஒருவரையே நோக்குவோம். **உத்தமமான வழியிலே விவேகமாய் நடப்பேன், எப்பொழுது என்னிடத்தில் வருவீர் என் வீட்டிலே உத்தம இருதயத்தோடு நடந்துகொள்ளுவேன். சங்.101:2.** சில நேரங்களில் நாம் பாவம் செய்யாவிட்டாலும் கூட நமக்கு ஏற்படுகிற சோர்வுகள் நம்மை தேவனைவிட்டு வழி விலகச் செய்கிறது. இயேசு கிறிஸ்து மரிக்கப் போகிறார் என்ற நிலையிலும் கூட சீஷர்கள் தங்களுடைய துக்கத்தின் மிகுதியில் சோர்ந்து போய் ஜெபிக்காமல் தூங்குகின்றனர் **(லூக்கா 22: 45). இப்படிப்பட்ட சோர்வையும் கர்த்தர் நீக்கி உங்களை உற்சாகப்படுத்தி திடப்படுத்துவார். உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார் (சங்கீதம் 27:14; யோவான் 14:1; 2 தெச. 2:17). அவரை முழு மனதோடு நீங்கள் ஏற்றுக் கொள்ளும் பொழுது உங்களுக்குள் இருக்கின்ற அழுக்கான கந்தையான காரியங்கள் எல்லாம் மறைந்து போகின்றன. சகலமும் புதியதாகும். (2 கொரி. 5:17).** உங்களுடைய பழைய மனித இயல்பு சோம்ப லான, மாயையான கவலை மற்றும் சோர்வான ஒரு ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு இருக்கலாம். ஆனால் இன்றைக்கு தேவன் உங்களுக்கு உற்சாகமான ஆவியை கொடுத்து, அவருக்காக எழும்பி பிரகாசிக்கிறவர்களாய், சோர்வுகள் நீங்கி மற்றவர்களை உற்சாகப்படுத்துகிறவர்களாய் மாற்றுவார்.

## 2. புதிய வழியை காட்டுகிறார்!

**நான் வனாந்தரத்திலே வழியையும், அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன் - ஏசாயா 43 : 19**

தேவன் வனாந்தரத்திலே வழியையும், அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன் என உங்களைப்பார்த்து கூறுகிறார். வனாந்தரம் என்றால் ஒரு வெறுமை. ஒன்றுமில்லா தன்மை, வறட்சி. வனாந்தரத்திலே அதிகமான மனிதர்கள் குடியிருக்க முடியாது. மனிதர்கள் வனாந்தரங்களிலே ஒருசில நாட்கள் பிழைக்கலாமே தவிர சந்தோஷமாக, செழிப்பாக வாழவே முடியாது. வேதத்திலும், வனாந்தரங்கள் ஆசீர்வாதமற்ற ஆந்தைகளும், கோட்டான்களும், பாம்புகளும் குடியிருக்கக்கூடிய இடமாக எழுதப்பட்டிருக்கிறது. இன்றைக்கு உங்கள் வாழ்க்கையிலும் இப்படிப்பட்ட ஒரு வனாந்தரம் காணப்படலாம். நம்பிக்கையற்ற ஒரு வாழ்க்கைகூட சில நேரங்களில் வனாந்தரமாக மாறிப் போகும். இஸ்ரவேல் ஜனங்களும் வனாந்தரமான ஒரு சூழ்நிலையிலேயே வாழ்ந்தனர்.

அவர்களுடைய வாழ்க்கை சிறையிருப்பிலும், அடிமைத்தனத்திலும் கடந்து கொண்டிருந்தது. ஆனால் ஏசாயா தீர்க்கதரிசியோ தேவனுடைய வாக்குத்தத்தங்களை மீதியாயிருக்கிற இஸ்ரவேலர் இடத்திலே கொடுக்கிறார். அவர்களை பார்த்துத் தான் தேவன் **"நான் உன்னோடுகூட இருப்பேன், உன்னை கைவிட மாட்டேன்"** என்று கூறுகிறார். தேவன் அவர்களோடுகூட இருந்து அவர்கள் வாழ்க்கையை முழுமையாய் மாற்றி வெறுமையை நீக்கி, ஆசீர்வாதமான கனி தரும் வாழ்க்கையாக மாற்றினார். அது தேவ கிருபை மனிதர்கள் ஒரு நாளும் வனாந்தரத்திலே நினைத்த இடத்தில் தண்ணீரை கண்டுபிடிக்கவே முடியாது. தண்ணீர் வேண்டும் என்றால் பல மைல்களுக்கு பூமிக்கு அடியில் துளையிட வேண்டும். அதுவும் அநேக நேரங்களில் தோல்வியிலே முடியும். தேவன் மனிதனை போல அல்ல. வனாந்தரத்திலே ஒரு நொடியில் நீரூற்றுகளை அவர் தோன்றச் செய்ய வல்லவர். **(ஏசாயா 35:6, 7; 44: 3,4; 55:13)** உங்கள் வாழ்க்கையிலும் வெறுமையாய் காணப்படுகிற எல்லாவற்றையும் கர்த்தர் மாற்றி ஆசீர்வாதமான நீரூற்றுகளை தோன்றச் செய்வார்.

**இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் நடந்தப்பொழுது அவர்களுக்கு தாகவிடாய் இருந்ததில்லை என்று ஏசாயா 48:21-ல்** பார்க்கிறோம். வேதத்திலே எகிப்தை குறித்து **உபாகமம் 4:20-ல்** அது ஒரு இருப்பு காளவாய் என்று எழுதப்பட்டிருக்கிறது. இருப்பு காளவாய் என்றால் ஆசீர்வாதமற்ற ஒரு தேசம். **உபாகமம் 11:10 முதல் 15** வசனங்களிலே தேவன் இஸ்ரவேல் ஜனங்களை பார்த்து **"எகிப்து தேசத்திலே நீ விதையை விதைத்து, கீரைத் தோட்டத்திற்கு நீர்ப்பாய்ச்சுகிறது போல உன் காலால் நீர்ப்பாய்ச்சி வந்தாய்; நீ சுதந்தரிக்கப் போகிற தேசமோ, மலைகளும் பள்ளத்தாக்குகளுமுள்ள தேசம், அது வானத்தின் மழைத் தண்ணீரைக் குடிக்கும் தேசம்"** என்றார். **உபாகமம் 8:7 முதல் 9ல்** நாம் வாசிக்கிறபடி எகிப்து தேசத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் மிகவும் உழைத்து ஏதாகிலும் பலன் கிடைக்குமா என்று எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால், தேவன் அவர்களுக்குக் கொடுத்த கானான் தேசத்திலோ அவர்கள் எந்தவிதமான கடின உழைப்பும் இல்லாமலே மிகுந்த அறுவடையை பார்த்தார்கள். இது தான் வனாந்தரங்களிலே நீர் ஊற்றுகளை உண்டு பண்ணுகிற தேவனின் மகத்துவம். நீங்களும் கூட இன்றைக்கு யோசிக்கலாம், என்னுடைய வாழ்க்கை மாராவாய் இருக்கிறது. எப்பக்கத்திலும் நான் நெருக்கப்படுகிறேனே நான் என்ன செய்தாலும் துன்பங்கள் தான் மிஞ்சுகிறது, ஆசீர்வாதமே இல்லை என்று புலம்பலாம். இன்றைக்கு கர்த்தர் புதிய ஊற்றுகளை உங்கள் வாழ்க்கையில் திறப்பார். நீங்கள் நினையாத வழிகளை உண்டு பண்ணுவார். அவர் உங்களை மறந்து போகவில்லை. உங்கள் மேல் நினைவாய் இருக்கிறார். உங்கள் வாழ்க்கையில் காணப்படுகின்ற வனாந்தரமான சூழலில், புதிய வழியைக் காட்டி ஆசீர்வாதமான நீரூற்றை கட்டளையிடுவார்.

## 3. துக்கமான சூழ்நிலைகளை சந்தோஷமாக மாற்றுகிற தேவன்

நம்மை உண்டாக்கின தேவனாகிய கர்த்தர் நாம் எப்பொழுதும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்றே நினைக்கிறார். ஆகவே தான் பூமியிலே நாம் சந்தோஷமாய் இருக்க நமக்கு இரட்சிப்பையும், நித்தியத்திலே நித்திய ஜீவனையும் கட்டளையிட்டார். இருப்பினும் நம்முடைய வாழ்க்கை பாரங்களினாலும், இழப்புகளினாலும் நிறைந்ததாக இருக்கிறது. எத்தனையோ ஆசீர்வாதங்களை நாம் பெற்றிருந்தாலும் ஒரு சிறிய துக்கம் ஒரு பிரச்சனை நம்முடைய சந்தோஷத்தை அப்படியே குலைத்துவிடுகின்றது. ஆனால் இன்றைக்கு தேவன் உங்களை பார்த்து **"நீ எந்த மட்டும் துக்கித்து கொண்டிருப்பாய்; நீ எந்த மட்டும் தாழ்ந்திருப்பாய்; உன்னைப் பற்றியே நீ நினைத்து நினைத்து சோந்து போய் விட்டாயே, இன்றைக்கு உன் துக்கத்தை எல்லாம் நான் சந்தோஷமாக மாற்றுவேன் என்கிறார். உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும் - யோவான் 16: 20. உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்**

**- யோவான் 14: 1**

நீங்கள் அவரில் களிகூர வேண்டும் என்றே தேவன் விரும்புகிறார். அவர் உங்களை ஆறுதல்படுத்துவார். உங்களுக்கு காட்சியளித்து உங்களை தேற்றுவார். ஒளிமயமான எதிர் காலத்தை உங்களுக்கு காண்பித்து, அற்புதத்தை செய்து உங்களை சந்தோஷப்படுத்துவார். தேவன் ஒருவருக்குத் தான் உங்களை சந்தோஷப் படுத்தக் கூடிய வழி தெரியும்.

- **ரூத்திற்கு தேவன் ஒரு போவாசை கொடுத்து அவள் வாழ்க்கையை செழிப் பாக்கினார்.**
- **தாவீதுக்கு ஒரு சாலொமோனை கொடுத்து அவனை உற்சாகப்படுத்தினார்.**
- **யோபு இழந்த எல்லாவற்றுக்கும் பதிலாக இரண்டத்தனையாய் திரும்பக் கொடுத்து அவனை ஆசீர்வதித்தார்.**
- **அன்னாள் அழுத பொழுது சாமுவேலை தந்து களிகூரப் பண்ணினார்.**
- **லாசருவை உயிரோடு எழுப்பி, மார்த்தாள், மரியாளை தேற்றினார்.**
- **யவீருவின் மகளை உயிரடையச் செய்தார்.**

இயேசு தம்மிடத்தில் வந்த அனைத்து மக்களுக்கும் பலத்த அற்புதங்களை செய்து அவர்களை மகிழச் செய்தார். சீஷர்களை உற்சாகப்படுத்த அவர்கள் மூலமாக அநேக அற்புதங்களை செய்து அவர்கள் தமது ஆறுதலிலே பெருகும்படிச் செய்தார். எனவே சோர்ந்து போகாதிருங்கள். **ஏசாயா 51:12ல்** பார்க்கிறபடி, அவர் நமக்கு ஆறுதல் செய்கிறவர். அவர் கொடுக்கிற ஆறுதல் உங்கள் ஆத்துமாவை களிகூரப் பண்ணும். ஒரு தாயை போல ஆற்றி தேற்றுவார். உங்களை அரவணைத்து முத்தமிடுவார். தம் அருகாமையிலே வைத்துக்கொள்வார். உங்களோடுகூட இருக்கிற மக்கள் உங்களை வெறுத்து தள்ளலாம், ஒதுக்கி வைக்கலாம், துன்புறுத்தலாம். ஆனால் தேவனோ ஒருபோதும் அப்படி செய்வதில்லை. நீங்கள் மகிழ்ச்சியாக வாழச்செய்வார். துன்பங்கள், கஷ்டங்கள் வந்தாலும் அவரில் நீங்கள் களிகூருவீர்கள். அவருடைய பிரசன்னம் உங்களுக்கு மகிழ்ச்சியை கொடுக்கும். **(ஏசாயா 66:13).** அவர் கொடுக்கிற மகிழ்ச்சியை ஒரு மனிதராலும் எடுத்துப் போடவே முடியாது. எனவே தான் கொடுமையான சிறைச்சாலைகளிலும் இருந்தும் கூட பவுலும், சீலாவும் தேவனை நோக்கி பாடினார்கள். மனிதரால் புரிந்துகொள்ள முடியாத தேவ சமாதானமும், சந்தோஷமும், உங்கள் வாழ்க்கையை நிரப்பும்

**அவைகளிலிருந்து ஸ்தோத்திரமும் ஆடல்பாடலின் சத்தமும் புறப்படும் அவர்களை வர்த்திக்கப்பண்ணுவேன், அவர்கள் குறுகிப் போவதில்லை அவர்களை மகிமைப் படுத்துவேன், அவர்கள் சிறுமைப்படுவதில்லை எரேமியா 30: 19**

# ஸ்தாபகர் தினம் – மார்ச் 13

## இம்மட்டும் கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார் (1 சாமு. 7:12)

என் தந்தையும், உங்கள் சகோதரருமான Dr. **ஆனந்த ஸ்திரா** அவர்களின் பிறந்த நாளை ஒவ்வொரு வருடமும் ஸ்தாபகர் தினமாக நாம் சிறப்பித்து வருகிறோம்.

என் தந்தை பிறந்த நாள் முதல் இன்று வரை தம் கண்மணியைப் போல பாதுகாத்து, 70-வது வயதை காணும்படி தயை செய்த கர்த்தரை மனதார ஸ்தோத்தரியுங்கள்.

தாயின் கருவிலேயே அவரை அறிந்து, விசேஷித்த அழைப்பை கொடுத்து, சுவிசேஷ பணியை செய்ய இம்மட்டும் பெலன் தந்த கர்த்தரை துதியுங்கள்.

பல பாடுகள், சரீர பெலவீனங்கள் இருந்தப்பொழுதும் கர்த்தர் தம் வார்த்தையினால் அவரை ஒவ்வொரு நாளும் பெலப்படுத்தி வருகிறார்.

கர்த்தர் தந்த பெலத்துடன் அன்பு பங்காளராகிய உங்களை காண, உங்களுக்காக ஜெபிக்க, ஏற்ற ஆலோசனைகள் வழங்க தனி ஜெபம் மற்றும் அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தின் வாயிலாக உங்களை நேரில் சந்தித்து, உங்களுக்காக ஜெபித்து வருகிறார்.

கர்த்தர் என் தந்தைக்கு இன்னும் ஆயுள் நாட்களை கூட்டித்தரும்படியாகவும், விசேஷித்த பெலன், நல்ல சுகத்தை கர்த்தர் அருளும்படியாகவும் ஜெபியுங்கள்.

என் தந்தையோடு இணைந்து ஊழியம் செய்கிற எங்கள் அனைவருக்காகவும், நல்ல சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

உங்களுடைய அன்பான ஜெபம் எங்களை அதிகமாய் பெலப்படுத்தும்!

ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள். கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள். (ரோமர் 16:16)

என் நெஞ்சமே, நீ கர்த்தரை நோக்கி: தேவரீர் என் ஆண்டவராயிருக்கிறீர், என் செல்வம் உமக்கு வேண்டியதாயிராமல்; பூமியிலுள்ள பரிசுத்தவான்களுக்கும், நான் என் முழுப் பிரியத்தையும் வைத்திருக்கிற மகாத்துமாக்களுக்கும், அது வேண்டியதாயிருக்கிறது என்று சொன்னாய் (சங். 16:2-3)



## அன்பரின் ஆறுதல் TV நிகழ்ச்சி நேரங்கள்

நம்பிக்கை TELEVISION

திங்கள், செவ்வாய், புதன்
காலை 6.30 – 7.00

புதன்
மதியம் 12.00 – 12.30

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.30 – 9.00

**தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

ARADANA TV
புதன், வியாழன், வெள்ளி
இரவு 7.00 – 7.30

**மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

HARVEST TV
சனி இரவு 07.30 – 08.00


# உடனடி தேவை

JOB VACANCY

* Adobe Premiere Pro–வில் எடிட்டிங் செய்யத்தெரிந்த Video Editors.
* வேதாகமம் தெரிந்த, பட்டப்படிப்பு முடித்த ஆங்கிலம் & தமிழ் தட்டச்சு பயின்றவர்கள்.
* பட்டப்படிப்பு முடித்த கம்ப்யூட்டர் நன்கு தெரிந்த Data Entry Operators
* அனுபவமுள்ள ஓட்டுனர்கள் (SUV)
* சமையல் செய்பவர்கள்
* தூய்மைப் பணியாளர் (பெண்கள் மட்டும்)

கிறிஸ்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

தகுந்த ஊதியம் வழங்கப்படும்

**Apply to: info@mojindia.org**

நேரிலோ அல்லது E.Mail மூலமாகவோ உங்களுடைய Resume & Certificate Copy – ஐ அனுப்பி வைக்கவும்



dranandastira@mojindia.org, margret@mojindia.org,
joshua@mojindia.org, jane@mojindia.org,
info@mojindia.org

# Praise Report - துதி அறிக்கை

## கேன்ஸர் என உறுதி செய்தனர், ஆனாலும் கர்த்தர் அற்புதமாக நார்மல் என அதிசயம் செய்தார்!



எனக்கு தொடர்ந்து வயிற்று வலி இருந்தது. அவ்வப் பொழுது மருந்து எடுத்து வந்தேன். சுகமாகும் பிறகு வலி வந்துவிடும் இப்படியே பல மாதங்கள் கடந்தன. இந்நிலையில் எனது மகள் என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றாள். அங்கு எடுத்த பரிசோதனைகளில் எல்லாம் நார்மலாக உள்ளது என்று சொல்லி விட்டார்கள். இருப்பினும் ஓரிரு நாளில் அதிக வலி எடுத்தது. உடனே மருத்து வரை பார்த்த பொழுது அவர் சி.டி. ஸ்கேன் எடுக்கும்படி கூறினார்கள். அந்த சோதனையில் எனது சிறுகுடலில் அதிகப்படியான சதை வளர்ந்திருந்ததை கண்டுபிடித்தார்கள். எனவே எண்டாஸ்கோப் எடுக்கச் சொன்னார்கள். அந்த சோதனைக்கு சென்ற பொழுது அதை எடுக்க முடியாத அளவிற்கு எனது குடலை சதை அடைத்திருக்கிறது என்று கூறிவிட்டார்கள். இப்படியே இரண்டு வாரம் தொடர்ந்தால் மலம் வராமல் அடைபட்டு விடும், பிறகு பெரிய பிரச்சனையாகிவிடும் என்று மருத்துவர் கூறிவிட்டார். அதிகப்படியான சதை வளர்ச்சி யால் சிறுகுடல் சுருங்கிவிட்டது. உடனடியாக அறுவை சிகிச்சை செய்தாக வேண்டும், இல்லையென்றால் உயிருக்கு ஆபத்தாகிவிடும் என்று கூறினர்.

இந்நிலையில் Dr. **ஆனந்த ஸ்திரா** அவர்களை தொடர்புகொண்டு நிலைமையை கூறி ஜெபித்துக்கொண்டோம். சகோதரர் அவர்கள் **"பயப்படாதீர்கள்! கர்த்தருடைய வல்லமையுள்ள கரம் உங்களோடு இருந்து உங்களை அற்புதமாக பாதுகாக்கும்"** என்று தைரியப்படுத்தினார்கள். அதன் பிறகு நல்ல படியாக எனக்கு அறுவை சிகிச்சை முடிந்தது. மேலும் கேன்ஸராக இருக்குமோ என சதையை எடுத்து பயாப்ஸி பரிசோதனைக்கு அனுப்பி னார்கள். மருத்துவர் நிச்சயம் உங்களுக்கு கேன்ஸர் இருக்க வாய்ப்பிருக்கிறது என்று சொல்லிவிட்டார். இதனால் நான் மிகவும் மனமுடைந்து போனேன். என்றாலும் சகோதரர் வார்த்தைகளை நினைத்து தைரியமாயிருந்தேன். பயாப்ஸி சோதனையில் எந்தப் பிரச்சனையும் இல்லை, எல்லாம் நார்மல் என்று மருத்துவர் சொன்னதும் எனக்கு மிகுந்த சந்தோஷம் உண்டானது. மிகவும் பயந்துபோய் இருந்த எனக்கு சகோதரர் அவர்களின் ஜெபம் மிகுந்த ஆறுதலை தந்தது. கர்த்தர் எனக்கு செய்தது மிக மிக பெரிய அற்புதம். இதை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன். சர்வவல்ல தேவனுக்கு ஸ்தோத்திரங்களை செலுத்துகின்றேன்.

**- திரு. நடராஜன், சென்னை**

## காணாமல் போன நகை திரும்ப கிடைத்தது!

எனது மகள் வங்கியில் பணியாற்று கின்றாள். கடந்த மாதத்தில் ஒரு நாள் அங்குள்ள நகை பாக்கெட்டுகளை சரிபார்த்த போது ஒரு பாக்கெட் (சுமார் 10 பவுன்) இல்லாதிருந்தது. இதனால் எனது மகள் மிகவும் கலக்க மடைந்தாள். எனக்கு தொலைப்பேசியில் தகவலை பதற்றத்துடன் கூறினாள். அதைக்

கேட்டு நானும் மனங்கலங்கினேன். ஏனெனில், அது கிடைக்கவில்லை என்றால் அதற்கு எனது மகள் தான் பொறுப்பேற்க வேண்டும். கலங்கிய நிலையில், அன்பரின் ஊழிய ஜெப மையத்தை தொலைப்பேசியில் தொடர்புகொண்டு ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். கர்த்தர் ஜெபத்தை கேட்டார்! ஜெபித்த 30 நிமிடத்திற்குள் அந்த காணாமல் போன 10 பவுன் நகை கிடைக்கும்படி கர்த்தர் அற்புதம் செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**- திரு. பொன்கலன், கன்னியாகுமரி**

## வேலை ஸ்தலத்தில் உயர்வை அருளின அற்புத தேவன்



எனக்கு இரண்டு சகோதரிகள் எனது தங்கை ஜெப செல்விக்கு 33 வயதாகிறது, அவளுக்கு திருமணத் தடைகள் ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. இதனால் அவளை நினைத்து நாங்கள் அதிகக் கவலையடைந்தோம். இந்நிலையில் Dr. **ஆனந்த ஸ்திரா** அவர்களின் Zoom கூட்டத்தில் கலந்துகொண்டேன். அதில் எனது தங்கையின் திருமண தடை நீங்க ஜெப உதவி கேட்டேன். அவர்கள் நேரலையில் ஜெபித்து **"மகளே! அடுத்து வரும் வரன் நிச்சயம் வாய்க்கும்படி கர்த்தர் அற்புதம் செய்வார்"** என்று கூறினார்கள். அதேபோல ஒருசில வாரத்தில் என் தங்கையை பெண் பார்க்க வந்த மணமகனோடு திருமண காரியம் முடியும்படி கர்த்தர் அற்புதம் செய்தார். நீண்ட நாள் கவலை எங்களுக்கு தீர்ந்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

நான் ஐ.டி. நிறுவனத்தில் பணியாற்றுகின்றேன். நான் பணியாற்றும் இடத்தில் எனக்கு பல்வேறு பிரச்சனைகளை கொடுத்தார்கள். என்னை வேலைவிட்டு நீக்கி விட வேண்டும் என்று ஒவ்வொரு நாளும் முயற்சி செய்தனர். இதனால் நான் மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளானேன். ஏனென்றால் எனக்கு கடன் பிரச்சனை, குடும்பத்தை கவனிக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தேன். இப்படிப்பட்ட நெருக்கமான நிலையில் Zoom கூட்டத்தில் சகோதரர் அவர்களிடம் நிலைமையை கூறினேன். அவர்கள் அன்போடு என் பிரச்சனைகளை கேட்டு **"ஆதி.50:21ல் யோசேப்பிற்கு அற்புதம் செய்த தேவன் நீ வேலை பார்க்கும் ஸ்தலத்திலும் உன் சத்துருக்களுக்கு முன்பாக உன்னை மேன்மைப்படுத்துவார், கலங்காதே!"** என்று மனதுருக்கத்தோடு ஜெபித்தார்கள். என்னால் இதை நம்ப முடியவில்லை. நம்மை வேலையை விட்டு நீக்குவதற்கு முயற்சி செய்கிறார்களே, எப்படி நான் அந்த நிறுவனத்தில் மேன்மையடைய முடியும் என தயங்கினேன். ஆனாலும் சர்வ வல்லமையுள்ள தேவன் எனக்கு இரங்கினார். எனக்கு விரோதமாக செயல்பட்டவர்களே, நான் நல்லவிதமாக பணியாற்றுகின்றேன் என்று கூறும்படி கர்த்தர் அற்புதம் செய்தார். இதனால் அதே நிறுவனத்தில் பதவி உயர்வும், சம்பள உயர்வும் பெற்றேன். இந்த அற்புதத்தை என்னால் நம்பவே முடியவில்லை. நம்முடைய தேவன் கூப்பிடுகிற எளியவனுக்கும், உதவியற்ற சிறுமையானவர்களுக்கும் இரங்குகிறவர் என்பதை அனுபவப் பூர்வமாக உணர்ந்து கொண்டேன். கர்த்தர் செய்த அற்புதத்திற்காக அவருக்கு ஸ்தோத்திரம்!

**- Sis. ஜெயா, சென்னை**

## கொரோனாவிலிருந்து தப்புவித்த வல்லவர்!

எனக்கு இரண்டு நாட்களாக காய்ச்சல் இருந்தது. கொரோனாவாக இருக்குமோ என்ற சந்தேகம் இருந்தது. ஏனெனில் மருமகனுக்கு கொரோனா வந்து குணமாயிற்று. எனது வீட்டிற்கு வந்த எனது மகளுக்கும், இரண்டு பேரக் குழந்தைகளுக்கும் அதிகக் காய்ச்சல் வந்து குணமாயிற்று. இந்நிலையில் கொரோனா

பரிசோதனையின் முடிவில் எனக்கு நெகடிவ் என்று வந்தால், அன்பரின் ஊழியத்திற்கு சாட்சி கடிதம் எழுதி எனது பொருத்தனை காணிக்கை அனுப்புவதாக தேவ சமூகத்தில் ஜெபித்திருந் தேன். கர்த்தர் எனது பொருத்தனையை அங்கீகரித்தார். பரிசோதனை முடிவில் நெகடிவ் என்றே வரும்படி கர்த்தர் அதிசயம் செய்தார். நான் செய்த பொருத்தனையின்படி அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை தருகின்றேன். தேவனுக்கு கோடா கோடி ஸ்தோத்திரம் செலுத்துகின்றேன்.

**- திருமதி. ஜீட் மேரி, சென்னை**

## இக்கட்டான நேரத்தில் உதவின தேவன்!

எனது மனைவி சங்கீதாவிற்கு டிசம்பர் மாதம் இரவில் உடல்நிலை சரியில்லாமல் தலைசுற்றல் மற்றும் நெஞ்சு பகுதியில் படபடப்பு ஏற்பட்டு சுயநினைவை இழந்த நிலையில் மிகவும் கஷ்டப்பட்டார். அந்த நேரத்தில் மருத்துவமனை செல்வதற்கு எங்கள் மலைப் பகுதியில் பேருந்து வசதியில்லை. ஒரு நாளைக்கு இரண்டு முறை தான் பேருந்து வந்து செல்லும். அந்த சூழ்நிலையில் நான் என்ன செய்வது என்று தெரியாமல் விசுவாசத்தோடு அன்பரின் ஊழியத்தை தொடர்புகொண்டு நிலைமையை சொல்லி ஜெபிக்கக் கேட்டேன். ஜெபத்தை கேட்ட அன்பின் தேவன் அந்த நேரமே பூரண சுகத்தைத் தந்து அற்புதம் செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

மேலும், என் சித்தப்பாவிற்கு சொந்தமான பட்டா நிலமும், அதனை ஒட்டி அரசாங்கத்தின் காட்டு புறம்போக்கு நிலமும் உள்ளது. அவரது நிலத்தில் மாத்திரம் பயிர் செய்தார். என்றாலும், அதற்கு வனத்துறையினர் புறம்போக்கு நிலத்தை ஏன் பயிர் செய்கிறாய் என்று அவரை வனத்துறையினர் கைது செய்து ரிமாண்டு செய்வதற்கு அழைத்துச் சென்றனர். இதனால் சித்தப்பா வீட்டில் உள்ள அனைவரும் மிகவும் கவலையடைந்தனர். இதற்காகவும் ஜெபித்துக் கொண்டோம். கர்த்தர் ஜெபத்தை கேட்டு அன்று மாலையே ஐந்து மணி அளவில் விடுதலை ஆகி வீடு திரும்பும்படி கர்த்தர் அற்புதம் செய்தார். தேவனுக்கு மகிமை உண்டாவதாக!

**- திரு.சேகர், ஜவ்வாதுமலை, திருவண்ணாமலை**

## கொரோனாவிலிருந்து அற்புத சுகம்

எனது பேரன் திரு. பிரேம் அவர்களின் நாலரை வயது மகன் கடந்த சில நாட்களுக்கு முன்னர் கொரோனா தொற்றினால் பாதிக்கப் பட்டு கர்த்தரின் பெரிதான கிருபையினால் பூரண சுகம் பெற்றுக் கொண்டதற்காக கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறோம். நன்றி காணிக் கையை ஊழியத்திற்கு அனுப்புகின்றோம்.

**திருமதி. மனோன்மணி மாத்யூஸ், மதுரை**

## எங்கள் வாஞ்சையை நிறைவேற்றின சர்வவல்லவர்



எங்களுக்கு திருமணமாகி பெண்குழந்தை உள்ளது. ஆண் குழந்தை வேண்டுமென்று நாங்கள் மனதிற்குள் நினைத்து கொண்டிருந்தோம். இந்நிலையில் திருநெல் வேலியில் குடும்ப ஆசீர்வாத ஜெபத்தில் கலந்து கொண்டோம். அப்பொழுது கூட்ட முடிவில் Dr.**ஆனந்த ஸ்திரா** அவர்கள் நாங்கள் எதுவும் சொல்லாமலேயே **"உங்களுக்கு ஆண் குழந்தையை தருவார்"** என்றும் அந்தக் குழந்தை ஜோசுவா இம்மானுவேல் என்று பெயரிடுங்கள் என்றும் கூறினார். இது எங்களுக்கு மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. அவர்கள் சொன்னது

போலவே அடுத்த ஆண்டில் கர்த்தர் எங்களுக்கு ஒரு ஆண் குழந்தையை கொடுத்தார். அந்த குழந்தைக்கு ஜோசுவா இம்மானுவேல் என்றே பெயர் வைத்தோம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்

**- திரு. ரூபன், திசையன்விளை**

## அற்புதத்தின் மேல் அற்புதம் செய்த தேவன்!

நான் வீடு கட்ட வேண்டும் என்ற சூழ்நிலையில் இருந்தபோது கிடைக்க வேண்டிய பணம் 3 லட்சம் மட்டும் கிடைக்கும் என்றார்கள். ஆனால் தேவன் அந்த சூழ்நிலையை மாற்றி 5 லட்சமாக உயர்த்தி கிடைக்க செய்தார்.

வீடு கட்ட பல இன்ஜினியர்கள் அதிக தொகையை கூறினார்கள். ஆனால் தேவன் ஒரு ஆசிரியை மூலம் இடைபட்டு குறைந்த செலவில் வீடு கட்டப்பட ஒரு இன்ஜினியரை தேவன் கொடுத்தார்.

ஒரு மதிய வேளையில் வீட்டின் காம்ப வுண்டிற்குள் நுழைந்த பெரிய சர்ப்பத்திடமிருந்து எங்களை பாதுகாத்தார்.

ஊரடங்கு நிமித்தமாக எனக்கு கிடைக்க வேண்டிய பண பலன் கிடைக்க பல தடைகள் ஏற்பட்டது. அந்த தடைகள் எல்லாம் நீங்கி பண பலன் கிடைக்க உதவி செய்தார். கொரோனா காலத்தில் எங்களுக்கு விஷகாய்ச்சல் ஒரு வாரம் இருந்தது. தேவன் அதிலிருந்து அற்புத சுகத்தை கட்டளையிட்டார்.

**- திரு. எட்வின் ஞானராஜ், பொள்ளாச்சி**

## வலிப்பு நோயிலிருந்து அற்புத சுகம் தந்த தேவன்!

எனது நான்கு வயது குழந்தைக்கு வலிப்பு நோய் வந்து அடிக்கடி கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான். இதனால் நாங்கள் குழந்தையை நினைத்து அதிகக் கவலையடைந்தோம். வலிப்பு வந்து விட்டால் குழந்தை துடித்து போய்விடும். மருத்துவம் செய்தும் குணமாக வில்லை. இந்நிலையில் திருநெல்வேலியில் நடைபெற்ற அற்புத குடும்ப ஆசீர்வாத ஜெபத்தில் குழந்தையை தூக்கிக் கொண்டு வந்தோம். கூட்ட முடிவில் Dr. **ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் குழந்தைக்காக ஜெபிக்கும்படி கூறினோம். கர்த்தர் ஜெபத்தை கேட்டார். இப்பொழுது ஒரு மாதமாகியும குழந்தைக்கு வலிப்பு வரவில்லை. மருத்துவரிடம் அழைத்துச் சென்று காண்பித் தோம். அவர்கள் பரிசோதித்துவிட்டு குழந்தைக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை என்று கூறி விட்டனர். குழந்தையை பாதுகாத்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக!

**- திரு. கௌரிசங்கர், நாகர்கோவில்**

## அற்புத சுகம் கிடைத்தது!

என் சகோதரனுக்கு உயர் இரத்த கொதிப்பினால் சரீரமெல்லாம் பந்து போல வீங்கி, தலையிலும் வீக்கம் இருந்தது. இதற்காக ஜெபிக்கும்படி விஜயதா திருமண மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஜெப விண்ணப்பம் எழுதிக் கொடுத்தோம். எனது சகோதரனுக்காக உருக்கமாக ஏறெடுத்த ஜெபத்தினால் கர்த்தர் அற்புத சுகத்தை அருளினார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! **- திரு.பிளாரன்ஸ், நாகர்கோவில்**

## பயத்தை நீக்கி சுகம் தந்த தேவன்



2020ஆம் ஆண்டு எனது சரீரம் மிகவும் பெலவீனமாகி வெள்ளை அணுக்கள் 80,000 என குறைவாக இருந்தது. இதனால் நான் மிகவும் கலங்கினேன். அப்பொழுது திருநெல்வேலியில் நடை

பெற்ற அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்துகொண்டு Dr. **ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் ஜெபித்துக் கொண்டேன். அவர்கள் **"பயப்படாதே! கர்த்தர் உனக்கு பரிபூரண சுகத்தைத் தருவார்"** எனக் கூறினார்கள். அந்த ஜெபத்திற்கு பிறகு எனது வெள்ளை அணுக்கள் அதிகரிக்க ஆரம்பித்தது. பரிசோதனை செய்த பொழுது 2,30,000 என உயர்ந்திருந்தது. ஒரு சில நாட்களில் நான் பரிபூரண சுகமடைந்தேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! - Sis. **தெரஸா, திருநெல்வேலி**

## தேவைகள் சந்திக்கப்பட்டு வீடு கட்டப்பட்டது

எங்களுக்கு சொந்த வீடு கட்டுவதில் அதிக தடைகள் இருந்தது. அதற்காக சகோதரர் அவர்களிடம் ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டோம். கர்த்தர் அற்புதமாக வீடு கட்டப்பட தேவைகள் யாவையும் சந்தித்தார். 2020ஆம் ஆண்டு எனது மருமகனுக்கு ஏற்பட்ட பெரிய விபத்திலிருந்து கர்த்தர் பாதுகாத்தார். அதற்காக கர்த்தரை மனதார துதிக்கிறோம்.

**- திருமதி. மல்லிகா, திருநெல்வேலி**

## தடைகள் நீங்கி வெளிநாடு வேலையை வாய்க்கச் செய்த தேவன்

2019ஆம் ஆண்டு நான் வெளிநாடு போகும் நிலையில் இருந்தேன். ஆனால் சில காரணங்களுக்காக போக முடியாது என்று சொல்லிவிட்டனர். எனது பயணச்சீட்டு இரத்தாகிவிட்டது. ஆனாலும், நிச்சயமாக எனக்கு வெளிநாடு செல்வதற்கு வாய்ப்பு கிடைக்கும், மீண்டும் செல்வேன் என்று நம்பினேன். Dr. **ஆனந்த ஸ்திரா** அவர்களிடமும் இந்த காரியத்திற்காக ஜெபிக்கும்படி கூறினேன். ஜெபத்தை கேட்ட அன்பின் தேவன் 2020ஆம் ஆண்டு நான் வெளிநாடு செல்வதற்கு ஏற்ற சூழ்நிலையை அமைத்துத் தந்தார். சுமார் இரண்டு ஆண்டுகள் வேலை செய்துவிட்டு இப்பொழுது விடுமுறையில் வந்துள்ளேன். திருநெல்வேலி அற்புத குடும்ப ஆசீர்வாத ஜெபத்தில் கர்த்தர் எனக்கு செய்த அற்புதத்தை சாட்சியாக சொல்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

- Ms. **லாவண்யா, வள்ளியூர்**


**எமது You Tube சேனல்களை Subscribe செய்யவும்**



Ministry of Jesus - Dr. Ananda Stira



Dr Jane Joshua

My Deliverance Church

**எமது முகநூல் பக்கங்கள் (Face book)**

Ministry of Jesus (Anbarin Oozhiyam) @ministryofjesus.in

Ananda Stira @dranandastira

Margretstira

Jane Joshua @DrJaneJoshua

My Deliverance Church @mydeliverance.church

Rev.Dr.A. Joshua @RevDrAJoshua

Ministry of Jesus
dr. janejosh
jonathanmosesrajstira

ministryofjesus.in

drjane15

# வேதத்தில் காணும் குடும்ப உறவுகள்

**கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்....**
**1பேதுரு 1:25**

தொகுப்பு : Dr. ஜேன் ஜாஷ்வா

## பதில்களை வசன ஆதாரத்துடன் பிழையின்றி எழுதுங்கள்

**உதாரணம்:**

தந்தை இஸ்ரவேலின் சங்கீதங்களை இன்பமாய் பாடினவன்
மகனோ மூவாயிரம் நீதிமொழிகளைச் சொன்னவன்
இவர்கள் கீர்த்தி பிரபலமாயிருந்தது
தந்தை யார்? மகன் யார்?
**பதில் : தாவீது, சாலொமோன் (1 இராஜா. 4:30-32)**

1. பஞ்சத்தில் போனவர்கள் 4 பேர்
அறுப்பில் திரும்பி வந்தவர்கள் 2 பேர்
அந்த இருவருமே உறவினர்கள்
அவர்கள் யார்? யார்?
.................................., ..................................

2. வில்வித்தையிலே வல்லவன்.
குடியிருப்போ வனாந்தரம்
தாய் பாசம் நிறைந்தவன்
தகப்பன் யார்? மகன் யார்?
.................................., ..................................

3. பெற்றவள் வளர்ப்புத் தாயானாள்.
வளர்த்தவள் பெயரிட்டாள்
விசுவாசத்தினால்... காக்கப்பட்டான்
தந்தை யார்? மகன் யார்?
.................................., ..................................

4. பற்பல சந்ததிகளாய் பிரிந்தவர்கள்
பன்னிரண்டு பிரபுக்களாய் இருந்தவர்கள்
பிரபுக்களின் மூதாதையோ ஒரு அடிமை
பிரபுக்களின் தந்தை யார்? மூத்த குமாரன் யார்?
.................................., ..................................

5. மகனின் வில் பின்வாங்கியனதில்லை
தந்தையின் பட்டயம் வெறுமையாய்த் திரும்பினதில்லை
கழுகுகளைப் பார்க்கிலும் வேகம் நிறைந்தவர்கள்.
தந்தை யார்? மகன் யார்?
.................................., ..................................

6. ஈசாயின் மகனுக்கு
உண்மையாயிருந்தான்
அவ்வப்போது செய்தி கொண்டு செல்வான்
ஈசாயின் மகனால் இவன் உயிர் காக்கப்பட்டது.
இவனுடைய தந்தை யார்? இவன் யார்?
.................................., ..................................

7. தந்தையோ மகா பராக்கிரமசாலி
மகனோ சவுந்தரியவான்
இவர்கள் கோத்திரம் சிறியது.
தந்தை யார்? மகன் யார்?
.................................., ..................................

8. இவருக்கு ஊழியக்காரன்
இவருக்கு மகன்
மகனின் கீர்த்தி தேசமெங்கும் பரவிற்று.
தந்தை யார்? மகன் யார்?
......................................, ......................................

9. தகப்பன் ஆசாரியன்
மகன் எரிந்து பிரகாசிக்கிற விளக்கு
அவன் வனாந்தரத்திலே
கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருந்தவன்
தந்தை யார்? மகன் யார்?
......................................, ......................................

10. அவளோ ரூபவதி,
அவளுக்குத் தாய் தகப்பனில்லை;
தன் குமாரத்தியாக எடுத்துக்கொண்டவன்
உறவினன் ஒருவன்
அவன் யார்? குமாரத்தி யார்?
......................................, ......................................

**விடைகள்**
**மார்ச் மாதம் 31ஆம் தேதிக்குள்**
**எங்களிடம் வந்து சேரவேண்டும்.**

உங்கள் முகவரி, பங்காளர் எண் மற்றும் தொலைபேசி எண்ணை மறவாமல் எழுதுங்கள்.
விடைகளைத் தெளிவாகப் புரியும்படி எழுதி இந்தப் பக்கங்களைக் கிழித்து எங்களுக்கு அனுப்பவும்.

..........................................................................................................................

..........................................................................................................................

முகவரி: அன்பரின் ஊழியம், 10–வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி–18.

உங்களுடைய பதில்களை வினாத்தாளிலேயே எழுதுங்கள். தனிப்பிரதியில் எழுத வேண்டாம். நீங்கள் பதில்களை வைத்து அனுப்பும் கவரை அதிக பசை போட்டு ஒட்டாதீர்கள்.

# திருநெல்வேலி ஜெபமையம்

திருநெல்வேலியில் அன்பரின் ஊழிய ஜெப மையம் கீழ்க்கண்ட முகவரியில் **ஞாயிற்றுக் கிழமை தவிர மற்ற நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 6.30 மணி வரை இயங்கி வருகின்றது.** திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களிலுள்ள மக்கள் எளிதாக வந்து செல்வதற்குரிய இடத்தில்தான் அலுவலகம் அமைந்துள்ளது. நீங்கள் யாவரும் நம்முடைய ஜெப மையத்திற்கு வந்து ஜெபித்து ஆசீர்வாதங்களைப் பெற்றுச் செல்லவும். நிச்சயமாகவே ஜெப மையத்திற்கு வருகின்ற ஒவ்வொருவரையும் கர்த்தர் ஆசீர்வதித்து மேன்மைப்படுத்துகிறார்.

## ஜெப மைய முகவரி

அன்பரின் ஊழிய ஜெப மையம், க.எண். 41B/2A, முதல் மாடி,
திருவனந்தபுரம் ரோடு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி.
குறிப்பு:– பாளை பேருந்து நிலையம் அருகில், LIC அலுவலகத்திற்கும் ஸ்டேட் பாங்குக்கும் இடையிலுள்ள கட்டிடத்தின் முதல் மாடி
அலுவலக அலைபேசி எண்: 94889 08328



# இரக்கமுள்ள தேவன் நீரே!

**தேவசெய்தி : திருமதி. மார்கிரட் ஸ்திரா**

கிறிஸ்துவுக்குள் எனக்கு அன்பான சகோதர, சகோதரிகளே!

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். கடந்த இரண்டு மாதம் முழுவதும் உங்களையும், அன்பு பிள்ளைகளையும் அற்புதமாக சர்வ வல்ல தேவன் வழி நடத்தி இருப்பார் என விசுவாசிக் கின்றேன். இந்த மூன்றாம் மாதத்திலும் ஜெபத்தோடுகூட வேதத்திலிருந்து ஒரு சில காரியங்களை உங்களோடு நான் பகிர்ந்து கொள்ள கர்த்தர் உதவி செய்தமைக்காக அவருக்கு நன்றி செலுத்துகின்றேன். இந்த சத்தியம் உங்கள் வாழ்க் கைக்கு மிகுந்த பிரயோஜனமாக, ஆசீர்வாதமாக இருக்கும். ஜெபத்தோடு வாசியுங்கள்!

**உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார், உங்கள்மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார் கர்த்தர் நீதி செய்கிற தேவன் அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள். - ஏசா. 30:18**

## தேவன் இரக்கமும், மனதுருக்கமும் உள்ளவர்

மேற்கூறிய வார்த்தைகளை நாம் கவனித்து வாசிக்கும்பொழுது கர்த்தர் இரக்கமும், மனதுருக்கமும் உள்ளவர் என்று பார்க்கிறோம். அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவர் நம் மீது இரக்கம் வைக்கும்பொழுதுதான் நம்முடைய வாழ்க்கையில் அநேக நன்மைகள் கிடைக்கின்றது. இந்த இரக்கம் மிகுந்த தேவனை குறித்து வேதம் சொல்வது., **எவன் மேல் கிருபையாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ, அவன்மேல் கிருபையாயிருப்பேன்; எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ, அவன்மேல் இரக்கமாயிருப்பேன் - யாத். 33:19.** கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்.அவர் எப்பொழுதும் கடிந்துகொள்ளார்; என்றைக்கும் கோபங்கொண்டிரார். அவர் நம்முடைய பாவங்களுக்குத் தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக் கட்டாமலும் இருக்கிறார்.

**பூமிக்கு வானம் எவ்வளவு உயரமா யிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள் மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதா யிருக்கிறது. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார். தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறது போல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். சங்கீதம் 103:8-13** இந்த வசனங்களை நாம் வாசிக்கும் பொழுது கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர் என்று பார்க்கிறோம். **அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை என்று புலம்பல் 3:22ல்** எழுதப்பட்டுள்ளது. இந்த இரக்கம் என்பது ஒரு மனிதன் தவறு செய்யும்பொழுது, பாவம் செய்யும் பொழுது அவனுக்கு காண்பிக்கப் படுகின்ற ஒன்று. மேலும், இரக்கமானது அதை பெற்றுக் கொள்ள தகுதியுள்ளவர்களுக்கு அருளப்படு கின்றது. கர்த்தருடைய இரக்கம் நம்முடைய வாழ்க்கையில் அதிகமாய் ஊற்றப் படுகின்ற பொழுது நாம் ஆசீர்வதிக்கப்படுகின்றவர் களாய் மாறுகிறோம். அவர் ஒருநாளும் நம்மை துன்புறுத்துகின்ற, வேதனைப்படுத்துகின்ற தேவனல்ல.

இஸ்ரவேல் ஜனங்களை குறித்து வேதத்தில் நாம் வாசிக்கும்பொழுது அவர்களுக்கு கர்த்தர் எத்தனையோ அற்புத, அடையாளங் களை செய்தபோதும் அவர்கள் தேவனையும், அவர் செய்த கிரியைகளையும் மறந்து போகிறவர் களாக காணப்பட்டார்கள். தேவன் அவர்கள் மீது மிகுந்த அன்புள்ளவராக இருந்தும் கூட அவர்கள் அதை உணராதவர்களாக, வணங்காக் கழுத்துள்ளவர்களாய் இருந்தார்கள். **ஆனாலும் சீக்கிரமாய் அவருடைய கிரியைகளை மறந்தார்கள் அவருடைய ஆலோசனைக்கு அவர்கள் காத்திராமல், வனாந்தரத்திலே இச்சையுள்ளவர்களாகி, அவாந்தர வெளியிலே தேவனைப் பரீட்சை பார்த்தார்கள் - சங். 106:13,14** இருப்பினும், கர்த்தர் அவர்களுடைய பாவங்களை எண்ணாமல் தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குவதுபோல அவர்களுக்கு இரங்கினார். எவ்வளவு அருமை யான தேவன் பாருங்கள்! தேவனை வேதனைப் படுத்துகிற காரியம் மனிதர்கள் செய்கிற பாவமே. இருப்பினும் அந்த பாவத்தில் மூழ்கியிருக்கிற மனிதர்களுக்கு அவர் இரக்கம் காட்டத் எப்பொழுதும் தயராய் இருக்கிறார். ஆம் பிரியமானவர்களே! நாமும் கூட இஸ்ரவேல் ஜனங்களைபோல வழி தப்பி திரிகிற ஆடுகளை போல இருக்கலாம், தேவனை மறந்து ஜீவிக்கிற வர்களாக காணப்படலாம். ஆனாலும் கர்த்தர் நம் மேல் இரங்குகிறவராகவே இருக்கிறார்.

## இரங்குகிற தேவனிடத்தில் திரும்புவோம்

இரக்கம் காண்பிக்கின்ற தேவன் நம்மிடத்தில் என்ன எதிர்பார்க்கின்றார். தகப்பனை காட்டிலும் நம் மீது அளவற்ற அன்பு கொண்டவர் நம் தேவன். அவருடைய அன்பிற்கு முடிவேயில்லை. அவர் ஒருநாளும் நம்மை புறக்கணிக்கிறவர் அல்ல. ஆனால் நம்மிடத்தில் அவர் எதிர்பார்ப்பது ஒன்றுதான், **"நாம் அவருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டு அவரிடத்தில் சேரவேண்டும்"** என்பதே. இஸ்ரவேல் ஜனங்கள் அதை செய்யாதபடியால் வனாந்தரத்தில் நாற்பது வருடங்கள் அலைந்து திரிய வேண்டியதாயிற்று **(எண். 14:26-35)** தங்களுடைய இச்சைகளுக்கு ஏற்ப நடந்து, தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் போனார்கள். இதுவே அவர்களுடைய உபத்திரவங்களுக்கும் காரணம்.

இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் இருந்த பொழுது **லூக்கா 15:11-24ம்** வசனத்தில் மிகவும் அருமையான ஒரு உவமையை கூறினார். அந்த உவமையில் இளையகுமாரன் தன் தகப்பனுக்கு விரோதமாய் மிகுந்த பாவம் செய்தான். தகப்பன் சொல்லை கேளாமல் உலகத்தின் மீதும், உலகத்தின் இச்சைகளின் மீதும் மோகம் கொண்டவனாய் பல தவறுகளை செய்கிறான். இதனால் அவனுடைய வாழ்க்கை சீரழிகின்றது. பன்றிகள் சாப்பிடுகின்ற தவிட்டினால்கூட தன் வயிற்றை நிரப்ப முடியாத நிலைமை வந்த போது அவனுக்கு உணர்வு வந்தது. அவன் தேவனுக்கும், தகப்பனுக்கும் விரோதமாக பாவம் செய்தேன் என்று வருந்தி தகப்பன் வீட்டிற்கு செல்கிறான். அவன் தூரத்தில் வரும்பொழுதே தகப்பன் அவனை கண்டு மனதுருகி ஓடி அவன் கழுத்தை கட்டிக் கொண்டு அவனுக்கு முத்தம் செய்கிறான். இளைய குமாரன் அதோடு நின்று விடவில்லை. தகப்பனிடத்தில் **"பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ் செய்தேன் இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படு வதற்கு நான் பாத்திரனல்ல"** என்று கூறுகிறான். தகப்பனுடைய உள்ளம் மகனுடைய தவற்றை பார்க்கவில்லை. மாறாக மகனுடைய தோற்றத்தைப் பார்த்து அதைச் சரிசெய்ய, மகனுக்கு உயர்ந்த வஸ்திரத்தை உடுத்தி, கைக்கு மோதிரத்தையும், கால்களுக்கு பாதரட்சை களையும் தருகிறார். கொழுத்த கன்றை அடித்து புசித்து சந்தோஷமாய் இருப்போம் என்கிறான். இது தான் தகப்பனுடைய அன்பு, மனதுருக்கம்.

**நாம் செய்த குற்றங்குறைகளை ஏற்றுக் கொண்டு ஒரு அடி எடுத்து வைத்து இரக்கமுள்ள தேவனிடம் சென்றால் போதும். அவர் மீதமுள்ள தொண்ணூற்று ஒன்பது அடிகளை எடுத்து வைத்து நம்மை நோக்கி வருவார்.**

நாம் நம்முடைய பாவங்களை உணர்ந்து அறிக்கையிட்டு அவரிடத்தில் மன்னிப்பு கேட்கும் பொழுது கண்டிப்பாக அவர் நம் மீது மனதுருகி நம்முடைய பாவங்களையும், அக்கிரமங்களையும் மன்னித்து நமக்கு விடுதலை அளிப்பவராக இருக்கிறார்.

நம்முடைய வாழ்க்கையில் அநேக சமயங்களில் பாவங்களின் நிமித்தம் துன்பங்கள், கவலைகள் தான் மிஞ்சுகின்றது. அப்படிப்பட்ட நேரங்களில் ஆறுதலின்றி தவித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் தேவன் நம் மீது இரக்கம் காண்பித்து நம்மை ஆறுதல்படுத்துவார். பல நேரம் நாம் சிறிய தவறு செய்யும்பொழுது உலகம் நம்மை கேள்வி கேட்கும், கண்டிக்கும். அதன் பிறகு நம்மை ஒதுக்கி வைத்து நம்முடைய உணர்வுகளை புரிந்து கொள்ளாமல் நம்மை குற்றவாளியாக தீர்க்கும். ஆனால், நம் பரம பிதாவாகிய தேவனோ அப்படியல்ல! அவர் நம் குற்றங்களை மன்னித்து புது வாழ்வு தருவார்.

நீங்களும் கூட இன்றைக்கு தேவனை விட்டு தூரமாய் போயிருந்தாலும் அவரிடத்தில் இரக்கம் கேட்டு, உங்கள் தவறுகளை உணர்ந்து அவர் சமூகத் திற்கு வாருங்கள். அவர் உங்கள் விண்ணப்பங்களை கேட்டு உங்களை மன்னித்து ஏற்றுக்கொள்வார்.

## தேவனுக்கு காத்திருக்கிறவர்களுக்கு கிடைக்கும் ஆசீர்வாதம்

இயேசு நம்முடைய பாவங்களை மாத்திரம் மன்னிக்கிறவர் அல்ல. அவர் நம்மை ஆசீர்வதிக்கிறவரும்கூட. நம்முடைய வாழ்க்கையில் அநேக ஆசீர்வாதங்கள் உடனடியாக நமக்கு கிடைக்காமல் போகலாம், பல நேரங்களில் போராட்டங்களும், பிரச்சனைகளும், தடைகளும் நம்முடைய ஆசீர்வாதங்களை குலைத்து போடலாம். சோர்ந்து போகாதிருங்கள்! உங்களுடைய கண்ணீருக்கு மிகுந்த பலனுண்டு. தமக்கு காத்திருக்கிற ஒருவரையும் அவர் கைவிடுகிற வரல்ல. தமக்கு காத்திருக்கிறவர்கள் மீது அவர் இரங்கி ஆசீர்வாதங்களை பொழிகின்ற தேவன். **சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்! அவர்கள் ஓடினாலும் இளைப் படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள் - ஏசாயா 40:29,31.** முறுமுறுப்பின்றி அவருக்காக நாம் காத்திருக்கும்பொழுது நம்முடைய சோர்வுகளை நீக்கி அவர் நம்மை பலப்படுத்துவார். நாம் ஒருநாளும் வெட்கப்பட்டுப் போவதில்லை.

- அவருக்கு காத்திருக்கிற யாவரும் புது பெலனடைந்து கழுகுகளை போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள்.
- அவருக்கு காத்திருக்கிறவர்கள் மீது தேவன் இரக்கம் கொள்வார்.
- அவருக்கு காத்திருக்கிறவர்கள் பூமியை சுதந்தரித்துக் கொள்வாார்கள்.

எந்தச் சூழ்நிலையிலும், பிரச்சனைகள் மத்தியிலும் தேவன் மீது நம்பிக்கை கொண்டு அவருடைய அற்புதத்திற்காக காத்திருங்கள். அவர் உங்களை கைவிடமாட்டார். கர்த்தர் நிச்சயம் உங்கள் மீது தமது அளவில்லாத கிருபையையும் இரக்கத்தையும் பொழிந்தருள்வார். உங்களை அதிசயமாய் வழி நடத்துவாா. **அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. புல.3:22** என வேதம் கூறுகிறது. ஆகவே தைரியமாயிருங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து காப்பார்.

# S J SAVES TRUST

## நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை



எளியவன் உனக்குள் இல்லாதிருக்கும்படியாக இப்படிச் செய்ய வேண்டும். உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தின் எந்த வாசலிலும் உன் சகோதரரில் எளியவனான ஒருவன் இருந்தால், எளியவனாகிய உன் சகோதரனுக்கு உன் இருதயத்தை நீ கடினமாக்காமலும், உன் கையை மூடாமலும்...

அவனுக்குத் தாராளமாய்க் கொடுப்பாயாக; அவனுக்குக் கொடுக்கும்போது உன் இருதயம் விசனப்படாதிருப்பதாக; அதினிமித்தமாக உன் தேவனாகிய கர்த்தர்; உன்னுடைய எல்லாக் கிரியைகளிலும், நீ கையிட்டுச் செய்யும் எல்லாக் காரியங்களிலும் உன்னை ஆசீர்வதிப்பார்.

தேசத்திலே எளியவர்கள் இல்லாதிருப்பதில்லை; ஆகையால் உன் தேசத்திலே சிறுமைப்பட்டவனும் எளியவனுமாகிய உன் சகோதரனுக்கு உன் கையைத் தாராளமாய்த் திறக்க வேண்டும் என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன்.

உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடி உன்னை ஆசீர்வதிப்பதினால், நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன் கொடுப்பாய், நீயோ கடன் வாங்குவதில்லை; நீ அநேகம் ஜாதிகளை ஆளுவாய், உன்னையோ அவர்கள் ஆளுவதில்லை. - உபாகமம் 15:4,7,10,11,6

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் கடந்த கொரோனோ காலத்திலும் நாம் நம்முடைய இரட்சகராகிய இயேசுவின் பிறப்பின் பண்டிகையை நினைவுகூறும்படி கர்த்தர் கிருபை செய்தார். அதற்காக தேவனை ஸ்தோத்தரிக்கி றோம்! இந்த 2021-ஆம் ஆண்டு கிறிஸ்துமஸ்-ஐ முன்னிட்டு நம்முடைய அருமையான சகோதர, சகோதரிகள் உதவி யுடன் மொத்தமே இரண்டு கிழிந்த வஸ்திரங்கள் உள்ள மிகுந்த குளிரிலும், ஈரமான களிமண் தரையிலும் படுத்து கொண்டிருக்கிற ஏழைய எளிய பிள்ளை களுக்கு நல்லதொரு புத்தாடை வழங்கி அவர்களுக்கு கிறிஸ்துமஸ் கேக் கொடுத்து அவர்களை ஊக்குவிக்க தேவன் உதவி செய்தபடியால் அவரை துதிக்கிறோம்.

இப்பணிகளுக்கு உதவி வழங்கின அனைவருக்கும் எங்கள் நன்றியை தெரிவிக்கி றோம். பிள்ளைகள் தங்கள் வாழ்க்கையில் பிரியாணி மற்றும் கேக் பார்த்ததே இல்லை. அவ்வளவு ஏழ்மை நிலையில் உள்ள பிள்ளைகள். அதை வாங்கிக் கொடுத்ததும் மிகவும் சந்தோஷப்பட்டனர். ஏழைகள் சந்தோஷப்படும் பொழுது கர்த்தர் மகிழுகிறார். நம்மை எல்லா விதத்திலும் ஆசீர்வதிக்கிறார்.

நாம் தொடர்ந்து பிரதிபலன் கருதாமல் நன்மை செய்வோம். உங்கள் பிள்ளைகள் உயர்ந்த நிலையில் இந்தியாவில் அல்லது வெளி நாடுகளில் வேலை செய்து கொண்டிருந்தால் இந்த அறப்பணிக்கு உதவி செய்ய அவர்களிடம் சொல்லுங்கள். பிப்ரவரி மாதம் நாமக்கல் மாவட்டம் குமாரசாமி பாளையம், ஓலப்பாளையம். செல்லப்பம் பாளையம் சின்ன சோளிபாளையம் ஆகிய கிராமங்களில் பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் **200 பிள்ளைகளுக்கு அருமையான புத்தாடைகள், கிறிஸ்துமஸ் வெகுமதிகள் மற்றும் படிப்பிற்கு தேவை யான உபகரணங்களையும் தரும்படி கர்த்தர் தயை செய்தார். தொடர்ந்து குளிர்காலம் போகும் வரைக்கும் இப்படிப்பட்ட உதவிகளை மேலும் பலருக்கு வழங்க உள்ளோம். சில இடங்களில் மழை காலங்களுக்கு தேவையான குடைகள் வழங்கினோம்.**

**அத்துடன் கிராமப்புற மருத்துவம னையிலும் மிகவும் குறைந்த வருமானம் உள்ள ஏழைகளுக்கு மருத்துவ ரீதியான எல்லா உபகரணங்கள் மூலம் சிறந்த சிகிச்சைகள் அளிக்கப்படுகிறது. இதில் நல்ல அனுபவம் வாய்ந்த ஒரு** M.D. **ஒரு** M.B.B.S. **மற்றும்** M.S. Ortho Dr**கள் பணி புரிகிறார்கள்.** உங்களுக்கு தெரியும் இந்த காலத்தில் நாம் ஏழைகளுக்கு உதவி செய்யும் பொழுது ஏனோ தானோ என்று யாரையும் பணிக்கு அமர்த்திவிட முடியாது. சிறந்த மருத்துவர்களையே நாம் வேலையில் அமர்த்தியுள்ளோம். அவர்களுக்கு நாம் எவ்வளவு சம்பளம் கொடுக்க வேண்டும் என்பதும், நல்ல படித்த நர்ஸ்களுக்கு எவ்வளவு சம்பளம் தேவை என்றும் உங்களுக்கு தெரியும். அதின் தேவை களுக்காக ஜெபியுங்கள், தாங்குங்கள். இதை முன்னேற்ற இன்னும் நவீன உபகரணங்கள் நமக்கு தேவை.

பாத்ரூம், செப்டிக் டேங்க் மற்றும் மருத்துவமனை சுற்றியுள்ள தேவையில்லாத குப்பைகளை கொட்ட மூடப்பட்ட குப்பை தொட்டிகள் தேவைப்படுகிறது. மேலும் அல்ட்ரா சவுண்டு ஸ்கேனும் (Ultra Sound Scan) தேவை. இதற்கு மொத்தம் 25 லட்சம் (25,00,000/-) தேவைப்படுகிறது. இதற்கு உதவி செய்கின்ற தயாளர்கள் எழும்பும்படி ஜெபியுங்கள். வங்கி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**ஏழை எளியவர்களுக்கு உதவிட கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 019150310875369 |
| Bank Name | : | Tamil Nadu Mercantile Bank |
| Branch | : | Palakarai, Trichy. |
| IFS Code | : | TMBL0000019 |
| A/c Type | : | Current |

**மருத்துவமனை பணிகளுக்கு கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 36477148891 |
| Bank Name | : | State Bank of India |
| Branch | : | Cantonment, Trichy Main Branch |
| IFS Code | : | SBIN 0000930 |
| A/c Type | : | Current |

**IT Act–ன்படி Sec. 80G Exemption உண்டு**

## நாமக்கல் மாவட்டம் குமாரசாமி பாளையம், ஓலப்பாளையம், செல்லப்பம்பாளையம், சின்ன சோளிப்பாளையம் ஆகிய கிராமங்களில் உதவிகள் வழங்கப்பட்டது.



























# உலகச் செய்திகள்



✦ பள்ளியில் ஆசிரியர்களும், வீட்டில் பெற்றோரும் மாணவர்களுடன் இயல்பாக பழக வேண்டும். அவர் களின் கருத்துக்கும் எண்ணத்துக்கும் ஆசிரியர்கள் மதிப்பு அளிக்க வேண்டும்.


✦ மாணவ, மாணவிகள் மனஉறுதியோடு இருந்தால் வெற்றி பெறலாம் பிரச்சினைகள் நிறைந்தது தான் மனித வாழ்க்கை. இதற்கு யாரும் விதிவிலக்கல்ல. பிறப்பு முதல் இறப்பு வரை ஒவ்வொரு நிலைகளிலும் பல்வேறு போராட்டங்களை கடந்து தான் வெற்றி கிடைக்கும். பிரச்சனைகளை கண்டு எந்த நிலையிலும் மன உறுதியை இழந்துவிடக்கூடாது. எப்போதும் மன உறுதியோடு இருக்க வேண்டும். வெற்றி, தோல்வி களின் தாக்கம் ஒருவனை நிலைகுலைய செய்துவிடக் கூடாது.

✦ இதை மாணவ, மாணவிகள் இளம்வயதிலேயே கற்றுக்கொள்ள வேண்டும். நெருக்கடி ஏற்படுகிற போது அதை சமாளிக்கவும், எதிர்கொள்ளவும் தயாராக இருக்க வேண்டும். அவதூறுகளை புறம் தள்ளிவிடவேண்டும். நம்மை பற்றிய குறைகளை கேட்கும்போது அதில் உண்மை இருந்தால் திருத்திக் கொள்ள வேண்டும் தவறான கருத்துகள் சொல்லப் படுமானால் அதை கண்டு கொள்ளாமல் அலட்சியப் படுத்திவிட வேண்டும்.

✦ மாணவர்கள் தங்களின் பொறுப்புகளையும் கடமைகளையும் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். அதுதொடர்பாக யார் அறிவுறுத்தினாலும் கேட்டு நடக்க முன்வரவேண்டும். மேலும் தங்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள் குறித்து ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரிடம் தெரிவித்து தீர்வுகாண வேண்டும். பள்ளி சூழலில் மாணவர்கள் நண்பர்களிடம் நல்ல முறையில் பேசிப்பழக வேண்டும். கோபம், விரோதம் போன்றவற்றுக்கு இடம் அளித்துவிடக் கூடாது. அது மனரீதியாக தவறான பாதைக்கு மாணவர்களை அழைத்து சென்றுவிடும். மனஅழுத்தம் ஏற்படுத்தும் சம்பவம் ஏதும் நடந்தால் நல்லமுறையில் விவாதித்து தீர்வு காண வேண்டும். அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுத்து விடக்கூடாது.

✦ எல்லா பிரச்சனைகளுக்கும் தீர்வு என்பது உண்டு. தீர்க்க முடியாத பிரச்சனை எதுவும் கிடையாது. எனவே மாணவர்கள் நேர்மறை சிந்தனையோடு பிரச்சனைகளை அணுக வேண்டும். பிரச்சனைகளை கடந்து போகும்போது தான் வெற்றி கிடைக்கும். நம்முடைய நடவடிக்கையை ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் அணுகி விமர்சனம் செய்வார்கள். அதை எதிர்கொள்ளத்தான் வேண்டும். எப்போது விமர்சனம் எழத் தொடங்குகிறதோ அப்போதுதான் ஒருவருக்கு வளர்ச்சியும் முன்னேற்றமும் ஏற்படும்.

✦ பள்ளியில் ஆசிரியர்களும், வீட்டில் பெற்றோரும் மாணவர்களுடன் இயல்பாக பழக வேண்டும். அவர்களின் கருத்துக்கும், எண்ணத்துக்கும் ஆசிரியர்கள் மதிப்பு அளிக்க வேண்டும். எதையும் காரணம் காட்டி மாணவர்களின் சுயமரியாதைக்கு இழுக்கு ஏற்படுத்தி விடக்கூடாது. அது அவர்களை மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாக்கிவிடும் வாய்ப்பு உள்ளது. இளைய தலைமுறையினர் எதிர்கால வளர்ச்சியின் முக்கிய பங்காளர்கள். அவர்கள் எந்த நிலையிலும் மனஉறுதியை இழந்து விடக்கூடாது. அதுதான் எல்லாவற்றையும் சாதிக்கக்கூடிய சக்தி என்ற நம்பிக்கையுடன் களம் இறங்க வேண்டும். அப்போது தான் வெற்றியாளனாக அல்ல சராசரி மனிதனாக நடமாட முடியும். எதையும் தைரியத் தோடும், நேர்மறையான சிந்தனையோடும் எதிர் கொள்ளும்போது எந்த பிரச்சனையிலும் இருந்து மீண்டு வர முடியும். இதனை ஒவ்வொரு மாணவ, மாணவிகளும் உணர வேண்டும்.



✦ கேரளாவில் கொரோனா பரவல் காரணமாக கடந்த 2020ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் பள்ளிக் கூடங்கள் மூடப்பட்டன. 1ம் வகுப்பு தொடங்கி 12-ம் வகுப்பு வரையிலான மாணவர்கள் ஆன்லைன் மூலமாகவே கல்வி பயின்று வந்தனர். இந்த நிலையில் கேரளாவில் தற்போது கொரோனா பரவல் வெகுவாக குறைந்துள்ளதை தொடர்ந்து கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு பள்ளிகள் திறக்கப்பட்டன.

✦ முகக்கவசம் அணிவது, கிருமிநாசினி பயன் படுத்துவது, உடல்வெப்ப பரிசோதனை உள்ளிட்ட அனைத்துவிதமான வழிகாட்டுதல்களையும் பின்பற்றி வகுப்புகள் நடைபெற்றன. இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளதால் மாணவர்கள் ஆர்வத்துடன் பள்ளிகளுக்கு படையெடுத்தனர். இதனால் முதல் நாள் கிட்டதட்ட 82.77% வருகை பதிவானதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம்
## (Renovation)
## புதுப்பித்தல் பணிகள்

உங்கள் அனைவருக்கும் தெரிந்தபடி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம் கட்டி முடிக்கப்பட்டு 8 வருடங்கள் ஆகிறது. இதுவரைக்கும் நாம் எந்த பராமரிப்பு பணிகளும் அதில் செய்யவில்லை. குறிப்பாக ஆரம்பத்திலிருந்தே நாம் சில வேலைகளை நிலுவையில் வைத்துள்ளோம். அவை அனைத்தும் கண்டிப்பாக இந்த வருடத்தில் நாம் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். ஏனெனில் ஜெப ஸ்தலத்தில் அநேக இடங்களில் பழுது ஏற்படுகின்றது. நாட்கள் செல்ல செல்ல அது அதிகரித்து விடலாம். எனவே இந்த பராமரிப்பு பணிகளுக்கு உங்கள் உதாரத்துவமான நன்கொடைகளை, உதவிகளை அனுப்பிடுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தேவனுடைய ஜெப ஸ்தலத்தை நீங்கள் பராமரிக்கும் பொழுது கர்த்தர் உங்களுடைய குடும்பத்தையும் ஆசீர்வதித்து பெருகச் செய்வார்.

( Rs.20,000/- கொடுக்கக் கூடிய 100 நபர்கள்)

**தேவைப்படுகின்ற தொகை – Rs.20,00,000/-**

இப்பொழுது நமது வெப்சைட்டிலும் உங்கள் உதாரத்துவமான காணிக்கைகளை அனுப்பலாம்.

**ministryofjesus.in-donate**

---

திருச்சியில்

## குடும்ப ஆசீர்வாத ஜெபம்

நாள் : 2022 மார்ச் 26 சனிக்கிழமை

நேரம்
காலை 9.30 மணி முதல்
மதியம் 2.00 மணி வரை

இடம் : அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம்
10வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு,
தில்லைநகர், திருச்சி – 18

தேவ செய்தி

**Dr. ஆனந்த ஸ்திரா & குடும்பத்தினர்**

தொடர்புக்கு : (0431) 2765386, 94888 45627

---

**Telugu Whats App No: 91770 87860**